நீடித்த பாவனைக்கு
சொனென்ஷீன் சொனென்ஷீன்

பற்றிகளையே உபயோகியுங்கள்
வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்:
துரை அன் கோ
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU
தேசீய தினசரி. National Tamil Daily
மலர் 7 (19-11-65) இதழ் 280
விசுவாவசு கார்த்திகை 4 றஜபு பிறை 24 வெள்ளிக்கிழமை


பட்டு உடைகளை
றைக்கிளீன் செய்வதிலும்
சாயம் போடுவதிலும்
மிகப்பெரிய ஸ்தாபனம்
SUNLIGHT DYERS & DRY CLEANERS
சன்லைட்
டையேர்ஸ் அன் றைக்கிளீனேர்ஸ்
பெரியகடை (ராணிதியேட்டருக்கு அருகாமை)
யாழ்ப்பாணம்.
போன் 474.

பெட்ரோல், துறைமுகத் தொழிலாளர்

# வேலைக்குத் திரும்பினர்

## தகராறு பற்றி விசாரணை செய்வதாக மந்திரி வாக்குறுதி

### துறைமுக ஊழியரிடம் விளக்கம் கோரப்படும்

கொழும்பு, வியாழன்

தேசியசேவைகள் மந்திரி திரு. வீ. ஏ. சுகததாசாவுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பின்னர் பெட்ரோலியம் கூட்டுஸ்தாபனத்தைச் சேர்ந்த ஊழியர், தங்கள் இரண்டுநாள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு இன்றுகாலை வேலைக்குத் திரும்பினர்.

வேலைநிறுத்தத்துக்குக் காரணமாக இருந்ததாகக் கூறப்படும் கூட்டுஸ்தாபன சபை அங்கத்தவர் ஒருவருக்கும் இரு தொழிலாளருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறுபற்றியும் விசாரணை செய்யப்படுமென்று மந்திரி வாக்குறுதியளித்தார். தங்கள் குறைபற்றி விசாரணை செய்ய மந்திரி இணங்கியதால் வேலைக்குத் திரும்புவதெனத் தொழிலாளர்முடிவு செய்தனர்.

### விளக்கம் கோரப்படும்

நேற்று கொழும்பு துறைமுகத்தில் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம்செய்த ஒரு பிரிவுத் தொழிலாளர்களிடம் வேலைக்கு வராததுக்குரிய காரணம் காட்டுமாறு துறைமுக கூட்டுஸ்தாபனம் கேட்குமென்று அறியப்படுகிறது.

## 'தென்இலங்கை செல்ல தமிழ் ஆசிரியர் தயங்கக்கூடாது'

### செனட்டர் நடராசா

சுன்னும், வெள்ளி

'எனக்குக் கிடைத்துள்ள செனட்டர் பதவியைக் கொண்டு தமிழ் மொழிக்கு என்னுலான உதவியைச் செய்ய எப்போதும்முன்னிற்பேன். தமிழ் மொழிக்கு மேலும் சேவை செய்ய எனக்கு ஒருதருணம் கிடைத்துள்ளது என்றே நான் கருதுகின்றேன்.'

இவ்வாறு தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் செனட்டர்சு. நடராஜாவிற்கும் அவரது பாரியாருக்கும் அளிக்கப்பட்ட தேநீர் விருந்துபசாரத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசிய திரு. சு. நடராஜா கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

'செனட்டர் பதவி ஏற்றவுடன் எதிர்பாராத விதத்தில் தமிழ் மொழிக்கு சேவை செய்ய எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. சாகித்திய மண்டல மசோதாவை பிரேரித்து நான் உரை நிகழ்த்துகையில் சுதந்திரக் கட்சி செனட்டர்கள் சிங்களத்துக்கு அதிகப் பணம் ஒதுக்கக் கோரினர். தமிழ் மொழி தென் இந்தியாவில் வளம் பெறுகிறது. ஈழத்தில் அதற்கு நிதி ஒதுக்குவது அவசியமில்லை என்ற விதத்தில் அவர்கள் பேசினார்கள். அதற்கு நான் உண்மையை எடுத்துக்கூறி ரூ. 50 ஆயிரத்தில் ஒரு பகுதியை தமிழ் மொழிக்கும் ஒதுக்கும் படி செய்தேன்.

### தமிழ் எதிர்ப்பு இன்னமும் இருக்கிறது

தமிழ் எதிர்ப்பு இன்னும் நின்றுவிடவில்லை. தென் இலங்கையிலுள்ள பாடசாலைகளில் உள்ள தமிழ்ப் பகுதிகள்மூடப்படவிருக்கின்றன. தமிழ்ப் பகுதிகளுக்கு போதிய ஆசிரியர்கள் இல்லாத காரணத்தினுல் இந்த நடவடிக்கையைஎடுப்பதாக அரசாங்கம் கூறுகின்றது. தமிழ் பகுதிகளில் சேவை செய்யும் ஆசிரியர்கள் தென் இலங்கைக்கு செல்லத் தயங்கக்கூடாது. தென் இலங்கையில் இருக்கும் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு தமிழ் மொழியிலே கல்வி புகட்ட முடியாது திண்டாடுகின்றார்கள். இதற்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடமைபுரியும் ஆசிரியர்கள் ஒரு பரிகாரம் காணவேண்டும். ஆசிரிய சங்கங்கள் பெற்றோர் ஆசிரிய சங்கங்கள் ஒன்று சேர்ந்து இதற்கு வழிவகைகள் காணமுன்வர வேண்டும். பாடசாலைகள் தரம்பிரிக்கப்பட்டு, தகுதி வாய்ந்த ஆசிரியர்களையே நியமிக்க வேண்டும்.'

கல்லூரி அதிபர் திரு. டி. டி. ஜெயரத்தினம் வைபவக்துக்குத்தலைமை தாங்கினர்.

உணவுப் பொருள் தட்டுப்பாட்டை நீக்க

## காரியாதிகாரிகளுக்கும் புதிய அதிகாரம்

யாழ்ப்பாணம், வெள்ளி

அத்தியாவசிய பொருட்கள் பொதுமக்களுக்குக் கிடைக்கின்றனவா என்று கவனிக்கும்படி காரியாதிகாரிகளையும் கிராமசேவகர்களையும் மற்றும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களையும் அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

பெரிய உத்தியோகத்தர்களுக்கு விலைக்கட்டுப்பாட்டின்கீழ் கூடிய அதிகாரம் வழங்கப்படவிருக்கிறது. அதிகாரம் வழங்கப்பட்டால் இவர்களும் மோசடிகளைக் கண்டுபிடிப்பார்கள்.

கூட்டுறவு மொத்தவிற்பனவு ஸ்தாபனம், 23 யூனியன்களுக்கும் கொடுக்கும் பொருட்களின் கணக்கை தினமும் தனக்கு அறிவிக்கும்படியும், யூனியன்கள், அப்பொருள்களை மக்களுக்குக் கொடுக்கிறார்களா என்று காரியாதிகாரிகள் கவனிக்க வேண்டும் என்றும் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தில் பொருள்கள் 50 சதவீதம் கையிருப்பில் இருக்க வேண்டும் என்ற அரசாங்க அதிபரின் உத்தரவைத் தொடர்ந்து, ஸ்தாபனம் இதற்கான முயற்சி செய்துவருவதாகவும் தெரியவருகிறது.

### அபராதம்

தனக்குச் சொந்தமில்லாத பங்கீட்டரிசிப் புத்தகம் வைத்திருந்ததற்கும், கணக்கிலும் பார்க்கக்கூடிய அரிசி வைத்திருந்ததற்கும் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த ரி. பி. செல்லையா என்பவருக்கு யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் ரூ. 500 அபராதம் விதித்தார்.

தனக்குச் சொந்தமில்லாத பங்கீட்டு அரிசிப்புத்தகம் வைத்திருந்த மற்றொருவரான உருத்திரபுரம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மனேச்சர் எம். எல். தம்பிநாயகத்திற்கு 200 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

பாண்விலைப்பட்டியலை கடையில் தொங்கவிடாததற்காக வேலணை மண்கும்பானைச்சேர்ந்த வைரமுத்து ஏரம்புவிற்கு 100 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

விலைப்பட்டியலை கடையில் தொங்கவிடாததற்கு வதிரியைச் சேர்ந்த ஏ. கனகரத்தினம் என்பவருக்கு 250 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

## உத்தியோகமொழி அமுல்

### கமிஷனர்-அரசாங்கஅதிபர் ஆலோசனை

யாழ்ப்பாணம், வெள்ளி

வடமாகாணத்தில் உத்தியோக மொழியை அமுல் செய்வது சம்பந்தமான விபரங்களைச் சேகரிக்கும் பொருட்டுஉத்யோகமொழி இலாகா உதவிக் கமிஷனர் சென்ற புதன்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார்.

யாழ்ப்பாண அரசாங்கச் செயலகத்திற்குச் சென்று இதுசம்பந்தமாக அரசாங்க அதிபருடன் அவர் பேச்சுவார்த்தை நடத்தினர்.

## சியாங் படைகள் ஒத்திகை

தைப்பே, நவ. 18

தேசிய சீனுவின் முப்படைகள் தென் பகுதியில் கூட்டு ஒத்திகைஒன்றை நடத்தின. 65 நிமிடம் நடந்த ஒத்திகையை ஜனுதிபதிசியாங்கைஷேக்கும, 5000 அரசாங்க அதிகாரிகளும், ராஜதந்திரிகளும் பார்வையிட்டனர்.

## மீண்டும் கடும் போர்

சைகோன், நவ. 18

24 மணி நேரம் ஓய்வுக்குப் பின் அமெரிக்கப் படைகளுக்கும் வியட்காங் படைகளுக்குமிடையே மீண்டும் கடும் போர் தொடங்கியிருக்கிறது. கம்போடிய எல்லைக்கருகில் இப்போர் ஆரம்பித்தது.

பல்கலைக்கழகத்தில்

## நான்கு பாடங்களில் சித்தியடைபவருக்கே அனுமதி?

கொழும்பு, வியாழன்

ஜி. சி. ஈ. உயர்தரப்பரீட்சையில் நான்கு பாடங்களிலும் சித்தியடைந்தவர்களை மட்டுமே அடுத்த வருடம் முதல் பல்கலைக்கழகத்தில் அனுமதிப்பது பற்றி பல்கலைக்கழக நிர்வாகம் ஆலோசனை செய்துவருகிறது

இந்த வருடம் மூன்று பாடங்களில் சித்தியடைந்தும் மொத்தமாக 180 புள்ளிகளுக்குமேல் எடுத்திருந்த மாணவர்களும் பல்கலைக்கழகத்தில் அனுமதிக்கப்பட்டனர்.

மேற்குறிப்பிட்டவகையில் பல்கலைக்கழகத்தில் அனுமதி பெறத் தகுதிவாய்ந்தவர்களைப் பல்கலைக்கழகத்தில் அனுமதிப்பதால் ஆயிரக்கணக்கில் மாணவர்களைச் சேர்க்கவேண்டிவரும் என்றும் அது முடியாத காரியம் என்றும் பல்கலைக்கழக வட்டாரங்கள் கருதுகின்றன.

## சாஸ்திரியை ரஷ்யாவில் சந்திக்க அயூப் ஆவல்

### பதிலை மாஸ்கோ எதிர்பார்க்கிறது

மாஸ்கோ, நவ. 18

இந்தியப் பிரதமர் திரு. சாஸ்திரியை ரஷ்யாவில் சந்தித்துப் பேச பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் விருப்பம் தெரிவித்துள்ளதாயும், இதுபற்றி ரஷ்யா, இந்தியாவுக்கு அறிவித்திருப்பதாயும் கூறப்பட்டது.

திரு. சாஸ்திரியின் பதிலை ரஷ்யா இப்போது எதிர்பார்த்திருப்பதாய் நிதி மந்திரி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி நேற்றிரவு மாஸ்கோவை விட்டுப் புறப்படுமுன் கூறினர்.

கடந்த செப்டம்பர்மாதம் போர் நடைபெற்ற சமயத்தில் உஸ்பெக்கிஸ்தானிலுள்ள டாஷ்கண்டில் சந்தித்துப் பேசவருமாறு பிரதமர் கொஸிஜின் இந்தோ-பாகிஸ்தான் தலைவர்களை அழைத்திருந்தார். அப்போது சந்திப்புக்கு ஏற்ற சமயமல்ல என இரு தலைவர்களும் எவ்வித முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை.

இப்போது அதிபர் அயூப்பின் விருப்பம் திரு. பூட்டோவிடமிருந்து மாஸ்கோவுக்குக் கிடைத்திருக்கிறது.

## 30 பாகிஸ்தானியர் பலியாகினா

புதுடில்லி, நவ. 18

ராஜஸ்தானில கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஒரு சண்டையில் இந்திய ரோந்துப் படையினர் 30 பாகிஸ்தானியரைக் கொன்றதாகவும், 8 பாகிஸ்தானியரும், குறிப்பிடத்தக்க அளவு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதாயும் அறிவிக்கப்படுகிறது. இந்தியத் தரப்பில் மூவர் மாண்டு நால்வர் காயமடைந்தனர்.

## யுத்தக்கைதிகள்

புதுடில்லி, நவ. 18

பாரதத்திலுள்ள பாகிஸ்தான் யுத்தக் கைதிகள் மிக நன்ருக நடத்தப்படுவதாய் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

### மணிவாக்கு

மனிதனுக்கு கஷ்டங்கள் ஏற்படாமல் இருந்தால் அவர்கள் சோம்பேறிகளாகவும், சுகவாசிகளாகவும் ஆகிவிடுகிறார்கள்.

— வினோபாபாவே


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு கார்த்திகை 4 (19 11 65)


## சீனாவுக்கு மீண்டும் கதவடைப்பு

நவசீனாவுக்கு இம்முறையும் ஐ. நா. கதவடைத்துவிட்டது. இது உலக அமைதியிலும் உலகமெலாம் ஒரு குடும்பமாக வாழவேண்டுமென்ற பெருநோக்கம் கொண்ட மக்களுக்கு நிச்சயம் வேதனையளிப்பதாகும்.

என்றாலும் சீனாவை ஐ. நா. வில் அங்கத்துவ நாடாகச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்பதற்கு முன்னரைவிட இப்பொழுது ஆதரவு அதிகரித்திருப்பது ஆறுதலளிப்பதாகும். சீனாவுக்கு ஐ. நா.வில் அங்கத்துவமளிக்கக்கூடாதென்று சென்ற வருடம் 57 நாடுகளும் அங்கத்துவமளிக்கவேண்டுமென 41 நாடுகளும் வாக்களித்தன. ஒரு நாடு மட்டும் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. இவ்வருடம் சீனாவுக்கு அங்கத்துவமளிக்கவேண்டுமென கம்போடியாவும் மற்றும் பதினொரு நாடுகளும் கொண்டுவந்த தீர்மானத்தை ஆதரித்து 47 நாடுகளும், எதிர்த்து 47 நாடுகளும் வாக்களித்திருக்கின்றன. இருபது நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. இத்தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்படமுன் சீனாவுக்கு அங்கத்துவம் அளிக்கும் தீர்மானம் மூன்றிலிரண்டு பங்கு வாக்குகளால் நிறைவேற்றப்படவேண்டுமென்ற ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மூன்றிலிரண்டு பங்கு வாக்குகள் பெறவேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்படாமல் சாதாரண பெரும்பான்மை வாக்குகளுடன் சீனாவுக்கு அங்கத்துவமளிப்பதாக இருந்தால் இம்முறை சீனாவுக்கு ஐ. நா. வின் கதவு திறக்கப்பட்டிருக்கும்.

சியாங்கைஷேக்கின் தேசிய சீனாவுக்கு ஐ. நா. வில் பிரதிநிதித்துவம் இருக்கும்வரை ஐ. நா. வில் அங்கம் வகிக்க சீனா மறுக்கலாம். அது வேறு விஷயம். ஐ. நா. அங்கத்துவத்தை ஏற்பதும் மறுப்பதும் சீனாவைப் பொறுத்தது; ஆனால் உலகில் மூன்றில்ஒருபங்கு மக்கள் வாழும் ஒரு பெரிய நாட்டுக்கு, உலக நாடுகளின் மன்றத்தில் அங்கத்துவமளிக்க மறுப்பது நியாயமாகாது. நவசீனா என்ற ஒரு நாடு இருப்பதை எவருமே மறுக்க முடியாது. அது சக்தி வாய்ந்த ஒரு நாடாக மாறுவதையும் மறுக்க முடியாது. அணுஆயுதப் பரிசோதனைகளையும் நடத்தி அதுவும் ஓர் அணு வல்லரசாக உருவெடுத்துள்ளது. சீனாவை ஐ. நா. வில் சேர்த்தால், அது ஐ. நா. வின் ஒழுங்கையும், கட்டுக்கோப்பையும் குலைத்துவிடும் என்று அமெரிக்கா முதலிய மேற்கத்திய வல்லரசுகள் சில கூறுகின்றன. இது சரியான வாதமாகாது. சீனாவினால் தனது பிரதேசத்துக்கும், சுதந்திரத்துக்கும் ஆபத்து வந்துள்ளதென்று அஞ்சும் இந்தியாவும் கம்யூனிஸ சித்தாந்தம் காரணமாக வளர்த்த கடாவேமார்பில்பாய்கிறதேயென்று கவலையடைந்துள்ள சோவியத் யூனியனும் இப்பொழுதும் கூட சீனாவுக்கு ஐ. நா. வில் அங்கத்துவமளிப்பதை ஆதரித்துள்ளன. ஆசியாவிலும் உலகிலும் அமைதி நிலவ ஐ. நா. வில் சீனாவைச் சேர்த்துக்கொள்வதுதான் ஒரே வழி. மறைந்த இந்தியப் பிரதமர் ஸ்ரீ நேருவும் இதைப் பல தடவைகளில் வலியுறுத்திக் கூறியுள்ளார். சீனாவை ஒதுக்கி வைப்பதானது, அதன் தவறான செயல்களுக்கு ஐக்கிய நாடுகள் ஸ்தாபன அங்கத்துவ நாடுகள் பலவும் மறைமுகமாக ஆதரவளிப்பதாகும். சீனா என்று ஒரு நாடு இல்லையெனக் காட்டவேண்டுமென்ற நோக்கத்துடன் ஐ. நா. வில் இடமளிக்க மறுத்தால், சீனா என்ற ஒரு நாடு இருக்கிறது, அதற்கு சக்தியும் இருக்கிறது என்பதையும் காட்ட சீனா விஷமச்செயல்களில் தொடர்ந்து ஈடுபடலாம்.

இம்முறை வாக்கெடுப்பிலிருந்து சீனாவுக்கு ஐ. நா. வின் கதவு திறக்கப்படும் காலம் வெகுதூரத்தில் இல்லையென்பது தெளிவாகிவிட்டது.

## 'துறைமுக வீதி அமைக்க நிதி உதவுக'

மாவிட்டபுரம், வியா.

மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்துக்குச் செல்லும் ஒரு வீதியை அமைக்க ஐயாயிரம் ரூபா நிதி உதவி அளிக்குமாறு காங்கேசன்துறை பட்டின சபை அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

காங்கேசன்துறை பட்டின சபை ஐந்தாம் வட்டாரமான மயிலிட்டியிலுள்ள அம்மன் வீதியின் பின்பக்கமாக இந்த வீதி அமைக்கப்படவிருக்கிறது. ஐந்தாம் வட்டார அங்கத்தவர் திரு. எஸ். சிவனடியாரின் முயற்சியைத் தொடர்ந்து பட்டின சபைத் தலைவர் இக்கோரிக்கையைச் சமர்ப்பித்துள்ளார்.

## தொடர்ந்து நிவாரணம்

காங்கேசன்துறை, வியா.

கிளிநொச்சி, துணுக்காய், பூநகரி ஆகிய இடங்களில் சமீபத்தில் ஏற்பட்ட வரட்சி காரணமாக யாழ்ப்பாண சமூகசேவைப் பகுதியினர் கிளிநொச்சி, துணுக்காய், பூநகரி ஆகிய இடங்களில் மேற்கொண்ட வயல் நிவாரண வேலைகளை தொடர்ந்து செய்துவருகின்றனர்.

தமது சொந்த வயல்களில் விவசாயம் செய்யும் குடும்பங்களுக்கு மாதம் ஒன்றிற்கு நிவாரணமாக ரூ. 30/- வழங்கப்பட்டு வருகிறது.

இந்த வரட்சி மிகமோசமாக கரச்சிப் பகுதியையே பீடித்திருப்பதாக அறியப்படுகிறது.

## மின்சார என்ஜினியரை நியமிக்க மாநகரசபை முடிவு

யாழ்ப்பாணம், வெள்ளி

தற்போதைய மின்சார விநியோகத்திட்டம் மனித உயிருக்கே ஆபத்தை உண்டுபண்ணுமென்பதாலும் மின்சாரப் பகுதியில் போதிய மேற்பார்வையில்லாமையாலும், மின்சாரப் பகுதியின் வேலைகளையிட்டு, இச்சபை அதிருப்தியடைந்திருக்கிறது ஆகவே மின்சார என்ஜினியர் பதவியொன்றை உண்டாக்குவதென்றும், உடன் இப்பதவியை நிரப்புவதென்றும் இச்சபை தீர்மானிக்கிறது.

யாழ்ப்பாணம் மாநகரசபையின் பொதுக்கூட்டம் மேயர் திரு. எஸ். வி. மகாதேவா தலைமையில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றபோது திரு. க. வி. தெய்வேந்திரத்தினால் கொண்டுவரப்பட்ட மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது

திரு. தெய்வேந்திரன் மேற்கண்ட தீர்மானத்தைப்பிரேரித்துப் பேசும்போது கூறியதாவது: யாழ்ப்பாணம், கொழும்பிற்கு அடுத்த பெரிய நகரமாக இருப்பதால், இங்குதராதரம்பெற்ற மின்சார என்ஜினியர் அவசியம் தேவை மின்சாரப் பகுதி ஊழியர்கள் மாநகர சபை ஊழியர்களை அவமதிக்கின்றார்கள். மின்சாரம் சம்பந்தமாக அவர்களுடன் பேசமுடியாமல் இருக்கின்றது. யாழ். நகரில் வர வர மின்சாரம் படுமோசமாகிக் கொண்டுவருகிறது. பல உயிர்களே பலியாகியிருக்கின்றன. இந்த நிலையை நீடிக்கவிட்டால் மேலும் பல கஷ்டங்கள் ஏற்படும். ஆதலால் உடனடியாக ஒரு மின்சார என்ஜினியரை நியமிப்பது அவசியம்.

மின்சார இலாகா ஊழியர்கள் லஞ்சம் வாங்குகிறார்கள் என்றும் அதை நிரூபிக்கத்தான் தயாராக இருப்பதாகவும் திரு. தம்பு கந்தையா கூறினார். கடந்த ஒன்றரை வருடகாலமாக பதவியிலிருந்தமேயர்எதையும்சாதித்துவிடவில்லையென்றும் மின்சாரம் மோசமாகி வருகிறதென்றும் அவர் மேலும் கூறினார்.

இந்த சபை கடந்த காலத்தில் என்ஜினியர் தேவையில்லையென்று நிராகரித்துவிட்டதாகவும், ஆனால் என்ஜினியர் நியமிக்க வேண்டியது அவசியமென்றும் திரு. எஸ். நாகராசா பேசும்போது கூறினார்.

எங்கள் இலாகா ஊழியர்களைக் குறைசொல்வது முறையல்லவென்றும், குறையிருந்தால் அதை திருத்த முயற்சிக்கவேண்டும் என்றும் திரு. எஸ். அழகையா கூறினார்.

மாநகரசபை அங்கத்தவர்களை, ஊழியர்கள் கௌரவிப்பது சம்பிரதாயமென்றும், ஊழியர்களை அங்கத்தவர்கள் காப்பாற்றவேண்டியதும் சம்பிரதாயமென்றும் திரு. ஏ. துரைராசசிங்கம் கூறினார்.

திரு. ஏ. ஜி. ராஜசூரியர் பேசும்போது, யாழ். நகரில் மின்சாரம் வர வர மோசமாகிவருவதாகவும், தெருவெளிச்சத்தில் ஒரு கடிதத்தைக்கூட படிக்கமுடியாமலிருப்பதாகவும் கூறினார்.

அங்கத்தவருக்கும், ஊழியருக்கும் ஒரு தொடர்புமில்லையென்றும், ஊழியருக்குஉத்தரவிட மேயருக்கு மட்டுமே அதிகாரம் உண்டென்றும் மேயர் திரு. மகாதேவா கூறினார்.

தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது என மேயர் தெரிவித்தார்.

''பெரிய கடையில் சபைக்குச் சொந்தமான தகரக் கடைகள், மரக்கறிக்கடைகள், இறைச்சி, கோழிக் கடைகள் சில கேள்விகள் மூலமே குத்தகைக்கு கொடுபட்டு வருகின்றன குத்தகை காலம், முடிவில் மீண்டும் கேள்விகள் கோரப்படவிருக்கின்றன. இதன் காரணமாக அவர்கள் கடையைக் காலி செய்ய வேண்டியதோடு, கொடுத்த கடன்களை அறவிட முடியாமல் இருக்கின்றனர். மேலும் பழைய பஸ்நிலையத்தில் கேள்விகள்மூலம் தகரக் கடைகள் பெற்றவர்கள் பஸ்நிலைய இடமாற்றம் காரணமாக மிகவும் கஷ்டத்திற்குள்ளானதோடு தங்களது செலவில் மீண்டும் புதிய கடைகளை ஆஸ்பத்திரி வீதியில் அமைததுள்ளார்கள். இவர்களை வருட இறுதியில் கடையைவிட்டு விலகும்படி நிர்ப்பந்திப்பது அநியாயமாகும். எனவே கேள்விகள்மூலம் சகலகடைகளும் கொடுக்க வேண்டுமென்ற முறை இனிமேல் நீக்கப்பட வேண்டுமென்றும் வாடகையை ஒழுங்காகச் செலுத்தும் பட்சத்தில் கடைகளில் அவர்களையே தொடர்ந்தும் இருக்கவிடுவதென்றும், இவ்விஷயம் சம்பந்தமாக முன்னர் நிறைவேற்றிய சகல தீர்மானங்களையும் நீக்கிவிடுவதென்றும் இச்சபை தீர்மானிக்கின்றது.

திரு. க. வி. தெய்வேந்திரனால் கொண்டுவரப்பட்ட மேற்கண்ட பிரேரணையை நிதிக்கமிட்டிக்குவிட்டு, அதன்பின் விசேஷ கூட்டத்தில் ஆராய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

(6-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

சென்னையிலிருந்து ஓர் அன்பர் வந்தார். அங்கு ஒரு பிரபல சங்கீத சபாவின் நிர்வாகிகளுள் அவர் ஒருவர். சென்னையிலே சங்கீதத்தின் நிலைமையைப்பற்றி விசாரித்தேன்.

இப்போது அங்கு 'டப்பா' சங்கீதத்துக்குத்தான் அதிக கிராக்கியாம்! 50 பேரடங்கிய ஒரு 'டப்பா' சங்கீதக் கச்சேரியை அச்சபாவில் வைத்தார்களாம். 8 ஆயிரம் ரூபாய் வசூலானது. பெண்களும் மாணவர்களும் மண்டபம் தாங்காமல் வந்ததாயும் அவர் தெரிவித்தார். 50 'டப்பா' கலைஞரும் விதவிதமாக ஒலிக்கும் வாத்தியங்களை சேர்ந்து வாசித்த காட்சியைக் காணவே கூட்டம் வருவதாயும் சங்கீதத்தைக்கேட்பதைவிடபார்ப்பதற்கே இக்கால ரஸிகர்கள் விரும்புவதாகவும் சொன்னார்.

கர்நாடக சங்கீதக் கச்சேரி கேட்க மக்கள் வருவதில்லையா என்று கேட்டேன். சீமையிலே எடின்பரோவில் நடந்த காமன்வெல்த் இசைவிழாவிலிருந்து வெற்றியுடன் திரும்பிய லால்குடி ஜயராமன் (வயலின்) பாலக்காடு மணி, அவரது புதல்வர் இவர்கள் அடங்கிய ஒரு விசேஷ கச்சேரிக்கு ஒழுங்கு செய்ததாயும், அன்று வசூல் 120 ரூபாய் தானென்றும் தெரிவித்தார் அந்த அன்பர். பெரிய ஏமாற்றம். அக்கலைஞர்களுக்கு ஆயிரம் ரூபாய் தந்ததாயும், இந்தக் கச்சேரியால் சபாவுக்குப் பெரிய நஷ்டமென்றும் சொன்னார். 'டப்பா' கச்சேரி மூலம் சபாவுக்கு மூவாயிரம் லாபம்!

ரஸிகர்களின் போக்கு இப்படி இருப்பின், கர்நாடக சங்கீதத்தின் எதிர்காலம். சென்னையில் என்ன ஆகும்?

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணத்திலே ஒரு சங்கீத வகுப்பில் படிப்பிக்க சென்னையிலிருந்து நல்ல ஆசிரியர் வருவாரா? என்று அவரை ஓரன்பர் கேட்டாராம். குறைந்தது ஆயிரம் ரூபாய் சம்பளமும், போக்குவரத்து செலவுகளும் கொடுப்பதாயின் நல்ல ஆசிரியர் வரக் கூடுமென்றும், இலங்கைக்கு வர, நல்ல வித்வான்கள் மிகத் தயங்குவதாயும், சென்னையிலேயே 'டிவிஷன்'கள் மூலம் அவர்களுக்கு நல்ல வருவாய் கிடைப்பதாயும் அவர் பதிலளித்ததாகத் தெரிவித்தார்.

சங்கீத விஷயத்தில் இனிகூடியவரை இலங்கை சுயதேவைப் பூர்த்திக் கொள்கையைப் பின்பற்ற வேண்டி ஏற்படும். சென்னையிலும் அண்ணாமலையிலும் பயின்ற நல்ல கலைஞர்கள் இங்கு பலர் உள்ளனர். அவர்களை ஆதரித்து உற்சாக மூட்டுவது பல விதங்களிலும் நல்லது.

ஃ ஃ ஃ

கர்னாடக சங்கீதத்தைப் பற்றிய ஒரு புதிய விபரீத கருத்தை பிரபல சிங்கள கலைஞரும் சிங்கள இசைக் கல்லூரி அதிபருமான அமரதேவா என்பவர், வானொலி விசாரணைக் கமிஷன் முன் தெரிவித்துள்ளார். இந்தி இசையும், பிரஷ்ஷியாவிலிருந்து வந்த முஸ்லிம் இசையும் சேர்ந்தது தான் கர்நாடக சங்கீதம் என்று அவர் கூறினாராம். இந்த ஆராய்ச்சிக்கு என்ன ஆதாரமோ தெரியவில்லை.

சிங்கள இசைக்கான ஒரு கொள்கை இப்போது இல்லை என்றும். இக்கொள்கையை

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

வகுக்க இந்தியாவிலிருந்து ஒரு நிபுணரை அழைக்க வேண்டுமென்றும் அவர் கூறியுள்ளதுடன் தாம் மேற்கத்திய இசையை இப்போது பயில்வதாயும் கர்நாடக, இந்தி, வங்காளி சங்கீதத்துக்கு இலங்கை வானொலியில் சமஅந்தஸ்து அளிப்பதே மிக விவேகமாகுமென்றும் தெரிவித்துள்ளார்.

கலை விஷயத்தில் குறுகிய எண்ணங்களும், துவேஷங்களும் இல்லாமலிருப்பதே நல்லது. நமது இசைக் கலைஞர்களும் வேறு இசைமுறைகளையும் பயில முடியாதா? 'டப்பா' சங்கீதத்தை மக்கள் அதிகம் விரும்பக்காரணம் இருக்கத்தான்வேண்டும். புதுப்புது மெட்டுகளையும் இசைகளையும் கேட்க அவர்களுக்கு உள்ள ஆர்வத்தையே இது காட்டுகின்றது. யாழ்ப்பாணத்தில் கண்ணன் கோஷ்டியினர் பிரபல சினிமாப்பாட்டுகளை, பல இசைக் கருவிகளுடன் பாடிய ஒரு கச்சேரியைச் சமீபத்தில் கேட்டேன். சிறப்பாக மாணவிகள் பெரிதும் ரசித்து ஒவ்வொரு பாட்டுக்கும் கரகோஷம் செய்தனர்.

இந்த 'டப்பா' பாட்டுகள் சில நாட்களில் கேட்கப் புளித்துப்போகும். ஆனால் கர்நாடகஇசை கீர்த்தனங்களோ சிரஞ்சீவித்தன்மை வாய்ந்தவை. அவற்றைத் தூயமுறையில் பாதுகாக்க வேண்டியதுதான். இதே சமயம் ஜனரஞ்சகமான முறையில் நம் இசைக் கலையை வளர்ப்பது அவசியம். இது ஜனநாயககாலமல்லவா?

ஃ ஃ ஃ

முந்தியிருந்தாயும் நீயேயென்றும் முன் கயிலை மேவினாய் நீயேயென்றும், நந்திக்கருள் செய்தாய் நீயேயென்றும் நடமாடி நள்ளாறன் நீயேயென்றும், பந்திப்பரியாயும் நீயேயென்றும் பைஞ்ஞீலி மேவினாய் நீயேயென்றும், சிந்திப்பரியாயும் நீயேயென்றும் நின்ற நெய்த்தானாவென் நெஞ்சுளாயே.

— அப்பர்சுவாமிகள்

# சீனவுக்கு இம்முறையும் ஐ. நா. வில் இடமில்லை

## 3-ல் 2 பங்கு வாக்குகள் தேவை என்ற அமெரிக்க தீர்மானம் வெற்றி

### ஆசிய-ஆபிரிக்க தீர்மானம் தோல்வி: சாதகமாக 47 வாக்குகள்; பாதகமாகவும் 47.

நியுயோர்க், நவ. 18

ஐ. நா. இம்முறையும் சீனவைத் தன் அங்க நாடாகச் சேர்த்துக்கொள்ள மறுத்துவிட்டது. சீனவை, அனுமதிக்கவேண்டும் என கம்போடியாவும், மற்றும் 11 நாடுகளும் கொண்டுவந்த தீர்மானத்துக்கு சாதகமாக 47 வாக்குகளும் எதிராக 47 வாக்குகளும் கிடைத்தன. 20 நாடுகள் வாக்கெடுப்பில்கலந்துகொள்ளவில்லை.

இவ்வித முக்கியமான ஒரு பிரச்னையில் சபையின் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் தேவை என்ற முன்னைய தீர்மானத்தை வலியுறுத்தி அமெரிக்காவும் மற்றும் 10 நாடுகளும் கொண்டுவந்த தீர்மானத்தை சபை ஏற்றுக்கொண்டது. தீர்மானத்துக்குச் சாதகமாக 56 வாக்குகளும் பாதகமாக 49 வாக்குகளும் கிடைத்தன. 11 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

கம்போடியாவின் தீர்மானத்தை ஆதரித்தும், அமெரிக்காவின் தீர்மானத்தை எதிர்த்தும் இந்தியா வாக்களித்தது. சென்ற முறை பொதுச்சபையில் சீனவை அங்கீகரிக்கவேண்டும் என்ற தீர்மானத்தை ஆதரித்து 41 நாடுகளும், எதிராக 57 நாடுகளும் வாக்களித்தன என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு நாடு அப்போது வாக்களிக்கவில்லை.

## 3 நாள் சண்டையில் 1000 வியட்காங் பலி!

### சண்டையை நிறுத்த வட வியட்னும் யோசனையா?

சைகோன், நவ. 18

கம்போடிய எல்லைக்கருகே மூன்று நாள் நடைபெற்ற கடும் சண்டை காரணமாக, வட வியட்னும் துருப்புக்கள் உட்பட 1000 வியட்காங்கியர்கள் கொல்லப்பட்டிருக்கிருர்கள்.

86 அமெரிக்கத் துருப்புக்கள் கொல்லப்பட்டனர். 230பேர் காயமடைந்தனர். வியட்னும் சரித்திரத்திலேயே ஒரு வாரத்தில் இவ்வளவு அமெரிக்கர் செத்தது இதுவே முதல் தடவையெனக் கூறப்பட்டது.

இச்சண்டையில் 165 தென் வியட்னும் துருப்புக்களும் உயிர் விட்டனர்.

''பி 52'' ரக அமெரிக்க வெடிகுண்டு விமானங்கள் அலை அலையாகத் தங்கிய வியட்காங்கியர்மீது, தாக்குதல் நடத்தியதினுலேயே இவ்வளவு சேதம் ஏற்பட்டதாய் அறிவிக்கப்படுகிறது. 4 அமெரிக்க விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

வியட்னுமில் சண்டையை நிறுத்த வியட்னும், சமாதான நாடுகளைக் கேட்டிருப்பதாய் ஒரு செய்தி கூறுகிறது.

இதற்கிடையில் அமெரிக்க செனட்டர் மென்ஸ்பீல்ட் தலைமையில் அமெரிக்க தூது கோஷ்டி ஒன்று மாஸ்கோ வந்திருக்கிறது. ஜனதிபதி ஜோன்ஸனின் அந்தரங்கக் கடிதம் ஒன்றை செனட்டர் மென்ஸ்பீல்ட் கொண்டுவந்திருக்கிருர். வியட்னுமில் அமைதிப் பேச்சுக்களைத் துவக்குவது பற்றிக் குறிப்பிடும் இக்கடிதம் பிரதமர் கோஸிஜினிடம் ஒப்படைக்கப்படும். ——

## கலக அரசாங்கம் புதிய கவர்னரை நியமித்தது

### ரொடீஷியத் தலைநகரில் குண்டு வீச்சு: குறிப்பிடத்தக்க சேதம்

ஸாலிஸ்பரி, நவ. 18

திரு. ஸ்மித்தின் ரொடீஷிய கலக அரசாங்கம், நாட்டின் புதிய கவர்னராக உதவிப் பிரதமர் திரு. டியூபர்ட்டை நியமித்திருக்கிறது. சட்டபூர்வமான கவர்னர் திரு. கிப்ஸின் ஸ்தானத்தில் புதிய கவர்னர் நியமிக்கப்பட்டிருக்கிருர்.

இதற்கிடையில் கவர்னர் கிப்ஸின் அலுவல்களுக்கு மேலும் முட்டுக்கட்டை போடப்பட்டிருக்கிறது. கவர்னரின் பல அதிகாரிகள் வாபஸ்பெறப்பட்டிருக்கிருர்கள். அவரது உத்தியோக மோட்டார்கள் விலக்கப்பட்டுள்ளது. மாளிகைக் காவலர்கள் வாபஸ்பெறப்பட்டிருக்கிருர்கள்.

**வெடிகுண்டுச்சேதம்**

நேற்று 3000 ஆபிரிக்க ஆர்ப்பாட்டக்காரர்கள் தலைநகர் ஸாலிஸ்பரியின் மத்தியில் ஊர்வலம் சென்றபோது பொலிசார் அவர்களைக் கலைத்தனர். இதே போன்ற மற்றெர் ஆர்ப்பாட்டம் துருப்புக்களினுல் கலைக்கப்பட்டது. தலைநகரின் மத்தியில் நேற்று வெடிகுண்டு ஒன்று வீசப்பட்டது அது வெடித்ததினுல் குறிப்பிடத்தக்க சேதம் ஏற்பட்டதாய் அறிவிக்கப்பட்டது.

**வில்சன் எச்சரிக்கை**

பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் பி. பி. ஸி. மூலம் ஆபிரிக்காவுக்குவிடுத்த ஒலிபரப்புச்செய்தியில் கலக அரசாங்கத்தினுல் வேலைநீக்கம்செய்யப்பட்ட, செய்யப்படும் எந்த சிவில் சேவை அதிகாரிகளையும் பிரிட்டன் ஆதரித்து நிற்கும் என்றும், ரொடீஷியாவில் சட்டமும் ஒழுங்கும் நிலைநிறுத்தப்பட்டவுடன் அவர்களது பென்ஷன் இதர வசதிகள் ஆகியன அளிக்கட்படும்என்றும் வாக்குறுதியளித்தார். கவர்னர் கிப்ஸ்தான் ரொடீஷியாவில் ஒரு சட்டபூர்வமான அதிகாரி என்றும் வில்சன் கூறினுர்.

கலக அரசாங்கம் ஸாம்பியா மீது தாக்குதல் நடத்தினுல் ஐ. நா. கூறும் எந்தப் பரிகாரததையும் மேற்கொள்ள பிரிட்டன் தயங்காது என்றும் அவர் ஸ்மித் குழுவினருக்கு எச்சரிக்கை விடுத்தார்.

**பாதுகாப்புசபை**

நேற்று ஐ. நா. பாதுகாப்புசபையில் பிரிட்டிஷ் வெளிநாட்டுமந்திரி திரு. ஸ்டுவர்ட் பேசுகையில், எண்ணை உட்பட விரிந்த அளவில் ரொடீஷியா மீது பொருளாதாரத்தடை விதிக்க பிரிட்டன் இணங்குவதாகக் கூறினுர். நேற்றைய சபைக்கூட்டம் அங்கத்தினர்களிடையே திரைமறைவு பேச்சுக்களுக்காக இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டது. திரு. ஸ்டுவர்ட் இன்று பிரிட்டன் திரும்புவார்.

ரொடீஷியப் பொருள்களுக்கு மலாவி 90 சத விகிதம் இறக்குமதிக்கட்டணம் வசூலிக்க முடிவுசெய்திருக்கிறது. இதே நடவடிக்கையை ஏற்கனவே ஸாம்பியா மேற்கொண்டிருக்கிறது,

## பிரிட்டனில் குடியேற்றம்

லண்டன், நவ. 18

இவ்வாண்டு முதல் 9 மாதங்களில் 43000 காமன் வெல்த் பிரஜைகள் பிரிட்டனில் குடியேறியதாக அரசாங்க அதிகாரி ஒருவர் கூறினுர். சென்ற ஆண்டு இதே காலத்தில் 60000 காமன் வெல்த் பிரஜைகள் குடியேறினர்,

சென்ற ஆண்டில் மொத்தம் 55900 பேர் காமன் வெல்த் நாடுகளிலிருந்தும், 19211 பேர் இதர நாடுகளிலிருந்தும் பிரிட்டனில் குடியேறியதாக அறிவிக்கப்பட்டது. (பி. டி. ஸி.)

## மீசை மன்னன்

இஸ்தான்புல், நவ. 18

33 வயதான மஹ்மூத் டிண்டார் என்ற ஒரு துருக்கியர் தானே ''மீசை மன்னன்'' என மார்தட்டிக் கொள்கிருர். துருக்கியிலேயே தனக்குத்தான் பெரிய மீசை இருக்கிறது என அவர் கூறினுர். தன் மீசையின் ஒரு முனையிலிருந்து மறு முனைவரையுள்ள நீளம் இருபத்தைந்தரை அங்குலமாகும். (பி. டி. ஸி.)

## இலங்கை - இந்திய உறவு அபிவிருத்தி அடைந்துள்ளது

### இந்தியப்பிரதமர் அறிவிப்பு

புதுடில்லி, நவ. 18

இலங்கை, பர்மா, நேபாளம் ஆகிய நாடுகளுடன் இந்தியா தன் உறவை அபிவிருத்தி செய்வதில் வெற்றி பெற்றிருக்கிறதென்றும், ஆனுல் பாகிஸ்தான் விஷயத்தில் மட்டும் இது வெற்றி பெறவில்லை என்றும் பிரதமர் சாஸ்திரி கூறினுர்.

''நான் பிரதமர் பதவிக்கு வந்தவுடன் அண்டைநாடுகளுடன்உறவைஅபிவிருத்தி செய்வதிலேயே முதல் கவனம் செலுத்தினேன்.

நான் பதவியேற்றவுடன் இலங்கைப் பிரதமர் இந்நாட்டுக்கு வந்தார். நீண்டகாலமாக ஒரு பிரச்னையாக இருக்கும் இலங்கை இந்தியர்பிரச்னைபற்றி இலங்கைப் பிரதமருடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. இலங்கைப் பிரதமருடன் நான் செய்த ஒப்பந்தம் எல்லோருக்கும் திருப்தியளிக்கிறது என்று நான் சொல்ல முடியாது. ஆனுல் இப்பிரச்னையைத் தீர்ப்பதே எமதுமுயற்சியாகஇருந்தது' என்றும் சாஸ்திரி கூறினுர்.

''ஒரு வாரம் நடைபெற்ற இது சம்பந்தமான பேச்சுக்கள் இன்னும் அமுலாக்கப்படவில்லை. ஆனுல் புதிய இலங்கைப் பிரதமர் திரு டட்லி, அதை அமுல் நடத்துவதுபற்றி சிரத்தை எடுத்துக்கொள்வதற்கு நான் மகிழ்ச்சியடைகிறேன்'' என்றும் சாஸ்திரி கூறினுர்.

''திரு. டட்லிசேனநாயகா தாராள மனப்பான்மை படைத்தவர் என்பது குறித்து நான் வரவேற்கிறேன். இலங்கை-இந்தியா உறவு அபிவிருத்தியடைந்துள்ளது'' என்றும் சாஸ்திரி கூறினுர்.

(பி. டி. ஐ.

## எல்லைக்காந்தியை அழைக்க முயற்சி

புதுடில்லி, நவ. 18

தற்போது ஆப்கானிஸ்தானிலுள்ளகான்அப்துல் கபார்கானை (எல்லைப்புறக் காந்தி) இந்தியாவுக்கு வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைவதாயும், அவர்இந்தியாவிலிருந்துகொண்டே பக்தூனிஸ்தான் சுதந்திர போராட்டத்தை நடத்த அனுமதிக்கப்படுவாரென்றும் வெளிநாட்டு மந்திரி திரு. சுவர்ண்சிங் கூறினுர்.

'திரு. கபார்கான் மீது இந்தியா உயர்ந்த மதிப்பும் கௌரவமும் வைத்திருக்கிறது' என அவர் கூறினுர்.

## கிழக்கு பாகிஸ்தானில் அணுசக்தி நிலையம்

கராச்சி, நவ. 18

ஐந்தரைக் கோடி டாலர் செலவில் கிழக்கு பாகிஸ்தானில் ஒரு அணுசக்தி நிலயத்தை அமைக்க சுவீடன், நார்வே, டென்மார்க்ஆகிய நாடுகள் முன்வந்திருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

(பி.டி.ஸி.)

## மீண்டும் '1000 ஆண்டுப் போர்'

ராவல்பிண்டி, நவ. 18

காஷ்மீர் போர்நிறுத்தக் கோட்டை ஊடுருவல்காரர்கள் தாண்டியதை திரு. பூட்டோ ஒப்புக்கொண்டிருக்கிருர். ''இந்தியாவுடன் 1000 ஆண்டுகள் போர் நடத்துவோம்'' என மீண்டும் அவர் கூறினுர். மற்றெர் சண்டை ஏற்பட்டால் அது இந்தியாவுக்குள்ளே தான் நடக்கும் என்றும் பூட்டோ கூறினுர்.

## டி.டி.கே. வெற்றியுடன் திரும்பினுர்

புதுடில்லி, நவ. 18

1970-ம் ஆண்டுக்குள் ரஷ்ய—இந்திய வர்த்தகம் இரட்டிப்பாகும் என மாஸ்கோவிலிருந்து திரும்பிய நிதிமந்திரி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறினுர். ஆண்டுதோறும் பரஸ்பரம் 150 கோடி ரூபாய் பெறுமதியான பொருட்களை இரு நாடுகளும் ஏற்றுமதி இறக்குமதி செய்யும் என அவர் கூறினுர்.

இந்திய பாகிஸ்தான் சண்டையின்போது இதரநாடுகளைப்போல் அல்லாமல், ரஷ்யா தனது உதவிகளைத் தொடர்ந்து செய்துவந்தது என்றும், காஷ்மீர் பற்றி அதன்நிலை அப்படியே இருக்கிறது என்றும் டி. டி. கே. கூறினுர்.

இந்தியாவின்பால் மிகவும் பரிவுணர்ச்சி ரஷ்யாவில் காட்டப்பட்டதையும், பல திட்டங்களுக்கு ரஷ்ய உதவி கிடைக்கும் என்றும் கூறிய அவர், தமது ரஷ்ய விஜயம் ஒருவெற்றி எனக்குறிப்பிட்டார். ——

## 80 பெண்களை கடத்தினராம்

புதுடில்லி, நவ. 18

பாகிஸ்தானியர் சண்டையின் போது 80 சீக்கியப் பெண்களைக் கடத்திச் சென்றதாகவும், அவர்களில் 8 பேர் எப்படியோ தப்பி வந்ததாயும், ஒரு பெண் சட்லஜ் நதியைக் கடந்து வரும்போது மாண்டார் என்றும் லோகசபையில் கூறப்பட்டது. இது விஷயமாக தாமும் கோபமடைந்திருப்பதாயும் விசாரணைக்குப் பின் முழு அறிக்கை சமர்ப்பிப்பதாயும் பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் கூறினுர். ——

## தண்டித்தவருக்கு உதவினுர்

கார்ட்டூம், நவ. 18

கம்யூனிஸ்ட் கட்சியைத் தடைசெய்யும் சட்டம் ஒன்றை அரசியல் நிர்ணய சபையில் சமர்ப்பித்துப் பேசிய போது சூடான் பிரதமர் திரு. மொகமத் அஹமத் மகூப் திடீர் சுகவீனமுற்றுர். உடன் எதிர்க்கட்சித்தலைவர் டாக்டர் அஸப்தீன் அலி அமீர், பிரதமருக்குச் சிகிச்சையளித்தார். பிரதமர் சமர்ப்பித்த சட்டம் நிறைவேறினுல் டாக்டர் அலி (கம்யூனிஸ்ட்) நீக்கப்படுவார் என்பதும், ஈராண்டு சிறையிருப்பார் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஓரளவு இரத்தக் கொதிப்பினுல் பிரதமர் பாதிக்கப்பட்டார்.

பி. டி. ஸி

# களை பிடுங்கும் இயக்கம்

சாவகச்சேரி, வியா. தென்மராட்சிப் பகுதியில் களை பிடுங்கும் இயக்கம் சாவகச்சேரி இந்துக்கல்லூரி, டிரிபேக் கல்லூரி மாணவர்களால் திங்கட்கிழமை தொடக்கம் நடைபெற்று வருகிறது.

வட பெரும்பாக உதவி வித்தியாதிபதி திரு. தணிகாசலம், சாவகச்சேரித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு வ. ந. நவரத்தினம், தென்மராட்சிப்பகுதிக் காரியாதிகாரி திரு. ஆர். சிதம்பரப்பிள்ளை, தனங்கிளப்பு கிராமசேவகர், ஆசிரியர்கள், கமக்காரர் ஆகியவர்கள் இதில் பங்கு பற்றினர்.

உதவி வித்தியாதிபதி இயக்கத்தை ஆரம்பித்து உரையாற்றும்போது கூறியதாவது:

''பிள்ளைகள் புத்தகப் படிப்புடன் நில்லாது வச்ழ்க்கைக்கு இன்றியமையாத முக்கிய உணவு உற்பத்தியையும் இளமையில் கற்றுக் கொள்ளவேண்டும். புதிய கல்வித்திட்டம் விவசாயப் பயிற்சிக்கும் முக்கிய இடமளித்து வருகின்றது''. சாவகச்சேரி எம். பி. உட்படப் பலர் உரையாற்றினர்.

## ஆனைக்கோட்டையில்

ஆனைக்கோட்டைக் கிராமத்தின் பயிர்ச் செய்கைக் குழுவின் ஆதரவில் பாலசுப்பிரமணிய வித்தியாசாலை, ரோமன்கத்தோலிக்கப் பாடசாலை, அமெரிக்க மிஷன் பாடசாலை ஆகியவற்றில் பயிலும் மாணவ, மாணவிகளும் ஆசிரியர்களும் பயிர்ச் செய்கைக் குழுவின் அங்கத்தவர்களும் சிரமதான இயக்கத்தில் சென்ற திங்கட்கிழமை முதல் இப்பகுதியிலுள்ள வயல்களில் களை பிடுங்குவதில் ஈடுபட்டுள்ளனர். உணவு உற்பத்தி இலாகா அதிகாரிகளின்கீழ் இவ்வியக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

## அராலியில்

அராலி தெற்கு, கிழக்கு பயிர்ச்செய்கைக் குழுவினால் ஒழுங்குசெய்யப்பட்டு, நெல் வயல்களில் களைபிடுங்கும் மாணவ சிரமதான இயக்கம் இப்பகுதியில் சென்ற திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

காலை 8 மணியளவில் அராலிதெற்கு முருகமூர்த்தி வித்தியாசாலை மாணவ மாணவிகள் அப்பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. வி. நாகலிங்கத்துடன் பாடசாலைக் கொடியையும் சுலோக அட்டைகளையும் கையிலேந்தி கிராமியஆடல் பாடலுடன் பாடசாலையில் இருந்து ஊர்வலமாகப் புறப்பட்டனர். இவ்வூர்வலத்தில் கமத்தொழில் பகுதி பெரும்பாக உத்தியோகஸ்தர் திரு. இரத்தினராசா, கிருஷிகப்பகுதி போதனாசிரியர் திரு குமாரவேல், இப்பகுதி கிராமசேவையாயர் திரு. தர்மலிங்கம் ஆகியோரும் பயிர் செய்கைக்குழுப் பிரதிநிதிகளும் மற்றும் கிராமப் பிர

முகர்களும் பங்குபற்றி திரு. வி. மூர்த்தி என்பவரின் வயலுக்குச் சென்றனர். திரு. இரத்தினராசா சைவ ஆசார முறைப்படி தேங்காய் உடைத்து வைபவத்தை ஆரம்பித்துவைத்தார். களைபிடுங்கும் வேலை மூன்று மணிநேரம் நடைபெற்றது

# ஜி. ஜி. யை வரவேற்க ஏற்பா[டு]

பருத்தித்துறை, வியா. ஐ. நா. சபை பிரதிநிதிகள் குழுவின் தலைவராகச் சென்று இலங்கையின் புகழை உயர்த்தி டிசம்பர் மாத முற்பகுதியில் இலங்கை திரும்பும் யாழ்ப்பாண எம். பி.யும், தமிழ்க் காங்கிரஸ் தலைவருமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்திற்கு வடமராட்சிப் பொதுமக்கள் சார்பில் வரவேற்பு ஒன்று அளிக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

உடுப்பிட்டித் தொகுதியில் நடைபெறவிருக்கும் இவ்வரவேற்புக்கு உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் தலைமைதாங்குவாரெனவும்வவனியாஎம் பி. திரு. த. சிவசிதம்பரம் உட்பட தமிழ்க் காங்கிரஸ் பிரமுகர்கள் பலர் பாராட்டுரைகள் நிகழ்த்துவார்கள் எனவும் கூறப்படுகிறது.

# இரட்டைத்தட்டு பஸ் சேவை

பருத்தித்துறை, வியா. பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவுக்கு இரட்டைத் தட்டு பஸ்கள் வரவிருக்கும் இந்த நேரத்தில் அந்தப் பஸ்கள் டிப்போவுக்கான ரஸ்தாக்களில் ஒடுவது சாத்தியமில்லையென தொழிலாளர் சிலரும் பிறரும் அபிப்பிராயப்படுகின்றனராம்.

இந்த அபிப்பிராயத்தால் பருத்தித்துறை— யாழ்ப்பாணம் நீண்ட சேவைகள் பெரும்பாலும் கைவிடப்படலாமெனவும் இரட்டைத் தட்டுப் பஸ்சேவை பாடசாலை சேவைகளுக்கும், பருத்தித்துறை- புருப்பொறுக்கி, பருத்தித்துறை— கொடிகாமம், பருத்தித்துறை— தொண்டமனாறு போன்ற குறைந்த தூர சேவைகளுக்கே விடப்படலாமெனவும் கூறப்படுகிறது.

# வரவு-செலவுத்திட்டம்

பருத்தித்துறை, புதன் பருத்தித்துறை நகரசபையின் மாதாந்தக்கூட்டம் சபைத்தலைவர் திரு. ந. நடராசா தலைமையில் நடைபெற்றபோது அடுத்தவருடத்திற்கான உத்தேச வரவு-செலவுத் திட்டம் விவாதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

உத்தேச வருமானம் 416567 ரூபா எனவும் செலவு 416735 ரூபா எனவும் அறிவிக்கப்பட்டது.

இந்த வரவு-செலவுத்திட்டத்தில் 168 ரூபா பற்றுக் குறை ஏற்பட்டிருக்கிறது.

# அன்புப்பழம் நீ இங்கு வருவார்

யாழ்ப்பாணம், வெள்ளி சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கச் செயற்குழு உறுப்பினரும், சென்னை வை. எம். ஸி. ஏ. பட்டிமன்ற அழைப்பாளருமான அன்புப் பழம்நீ இப்பொழுது இலங்கை வந்துள்ளார். அவர் அடுத்த வாரம் யாழ்ப்பாணத்துக்கும் வரவிருக்கிறார்.

அண்மையில் அமைக்கப்பட்ட யாழ்ப்பாண இலக்கிய வட்டத்தினர் ஒழுங்கு செய்யும் ஒரு கூட்டத்தில் அன்புப்பழம்நீ சொற்பொழிவாற்றுவாரெனத் தெரிகிறது.

# 'செந்தமிழ் மாறுகிறது'

உடுப்பிட்டி, புதன் ''சைவர்களாகிய நாம் எம்மை இந்துக்கள் என்று கூறக்கூடாது இந்து சமயம் என்று ஒன்று இல்லை. சைவத்துள் அதனுடன் தொடர்புபட்ட அத்தனை சமயங்களும் அடங்குகின்றன. பொதுச் சமயம் என்று ஒன்றைக் கொண்டுவர முயற்சிக்கிறார்கள். பொதுச் சமயம் என்று ஒன்று கிடையாது. சைவப் பெரியார் சிவபாதசுந்தரமும் நாவலர் பெருமானும் இப்பொதுச் சமயத்தை மிக வன்மையாகக் கண்டித்துள்ளார்கள். சைவம் என்றும் அழியாதத. சைவர்கள் சைவர்களாகத்தான் இருக்க வேண்டும்'' இவ்வாறு பண்டிதர் சோ. இளமுருகனார் வாணி கலைக்கழக மாணவர் மன்றக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ''இக்காலத்தில் கல்லூரிகளில் இலக்கணக் கல்வி இல்லாமலிருக்கிறது. இதனால் மாணவர்களிடையே செந்தமிழ் மாறிக் கொடுந் தமிழும், கொச்சைத் தமிழும் பாவனைக்கு வருகின்றன. இன்னும் 25 ஆண்டுகளுக்கு இந்நிலை நீடிக்குமானால் செந்தமிழ்ப் பிரதேசமான யாழ்ப்பாணம் வேறுவிதமாக மாறிவிடும். யாழ்ப்பாணத்தில் தமிழ்ப் பகுதிக்கென நல்லதோர் வாசிகசாலையில்லை. இக்குறையை எமது தமிழ்ப் பிரதிநிதிகள் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்றார்.

திருவாளர்கள் க. கிருஷ்ணசாமி, பண்டிதர் இ. பரமகுரு, க. பேரம்பலம் ஆகியோரும் பேசினர். பண்டிதர் திரு. க. வீரகத்தி நன்றி கூறினார்.

பருத்தித்துறை

# 4-ந் திகதி நகரசபைத் தேர்தல்

பருத்தித்துறை, வியா, பருத்தித்துறை நகரசபையின் இரண்டாவது தேர்தல் டிசம்பர் மாதம் 4-ந் திகதி நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மொத்தம் ஒன்பது வட்டாரங்களிலும் 24 அபேட்சகர்கள் போட்டியிடுகிறார்கள்.

கட்சியின் அடிப்படையில் போட்டிகள் இல்லையெனச் சொல்லப்பட்டபோதிலும் சில வட்டாரங்களில் அதே அடிப்படையிலேயே பிரச்சாரமும் ஆதரவும்தேடப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

# சைவ மகாநாடு

யாழ்ப்பாணம், வெள்ளி வடமாநில சைவ இளைஞர் மாமன்றம் அடுத்த மாதம் 11-ம், 12-ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில்சைவமகாநாட்டை நடாத்த ஏற்பாடுகள் செய்துவருகிறது. இம் மகாநாட்டில் பல அறிஞர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

# தொழிற்கந்தோர்கள் சீர்திருத்தநடவடிக்கை

பம்பலப்பிட்டி, வியா. தொழில் வேலைவாய்ப்பு வீடமைப்பு மந்திரி ஜனாப் எம். எச். முகமது சகல தொழிற் கந்தோர்களையும் தீர்திருத்தி அமைக்க முடிவு செய்துள்ளார்.

இந்த தொழிற்கந்தோர்கள் எதுவித பிரயோசனமான வேலையையும் செய்யவில்லை என் பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் அடிக்கடி செய்த புகாரைத்தொடர்ந்த மந்திரி இவ்வித முடிவு செய்துள்ளார்.

இந்த தொழிற் கந்தோர்கள் வேலையற்றவர்களைப் பதிவதை மட்டுமே தற்போது செய்துவருகின்றன என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# ஆசியகல்விமந்திரிகள் மகாநாடு

பாங்காக், நவ. 18 வருகிற 22-ம் திகதிமுதல் 29-ம் திகதிவரை இங்கு நடைபெறவிருக்கும் ஆசிய கல்விமந்திரிகளின் இரண்டாவது மகாநாட்டில் 30 நாடுகளைச்சேர்ந்த சுமார் 200 பிரதிநிதிகள் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது. ஆசியாவில் கல்வி அபிவிருத்தி பற்றி மகாநாடு ஆராயும்.

ஆசிய, தூரகிழக்கு பொருளாதாரக்கமிஷனின் ஆதரவில் ஐ. நா. கல்வி, சமூக, கலாச்சார ஸ்தாபனத்தின் ஒத்துழைப்புடன் இம் மகாநாடு நடைபெறுகிறது.

முதல்மகாநாடு 1962-ல் டோக்கியோவில் நடத்தப்பட்டது, (பி. டி. ஸி.)

# கண்டியில் நாவலர் விழா

கண்டி, வியா. கண்டி சைவ மகா சபையினர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு மகா சபை மண்டபத்தில் நாவலர் விழாவை சிறப்பாக கொண்டாடவிருக்கின்றனர்.

கலாநிதி எஸ். வித்தியானந்தன் விழாவிற்கு தலைமை தாங்குவார்.

பிரதம பேச்சாளர்களாக வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஏ. அமிர்தலிங்கமும், கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். கதிரவேற்பிள்ளையும் கலந்துகொள்வார்கள்.

# மக்கள் கோரிக்கை

காங்கேசன்துறை, வியா. காங்கேசன்துறையில் உள்ள சந்தையில் பகல் 12 மணிக்குப்பின் காய்கறிகள் வாங்க முடியாதிருப்பதாகவும் அவ்விதம் வாங்கவேண்டின் கூடியவிலை கொடுத்தே வாங்க வேண்டியிருப்பதாகவும் இதனைக் கருத்தில் கொண்டு விற்பனவுஇலாகாவின் கிளையென்று காங்கேசன்துறையில் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு காங்கேசன்துறை மக்கள் விற்பனவு இலாகா கமிஷனருக்கு அனுப்பியுள்ள ஒரு மகஜரில் கேட்டுள்ளார்கள்.


REGAL--JAFFNA
NOW SHOWING!
M. G M's
36
HOURS
(Panavision)

4-வது வெற்றி வாரம்!

கிங்ஸலி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) ராஜ் (நீர்கொழும்பு)
தீவொளி (நுவரேலியா) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2 6, 9-30 மணிக்கு

தென்னாட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!

எம். ஜி ஆர். — சரோஜாதேவி
(இருவேடங்களில்)
ரங்கராவ், நம்பியார், தங்கவேலு, ரத்னா, பண்டரிபாய், நாகேஷ், மாதவி விஜயலக்ஷ்மி
நடித்த



விஜயா கம்பைன்ஸ்
எங்கவீட்டுப் பிள்ளை
(ஈஸ்மென்கலர்)

மாவிட்டபுரம் குருக்கள் கூறுகிறார்கள்:
இறைவன் திருமேனியை
சந்தனக்காப்பிட்டு
அலங்கரிக்கவும் பின் பிரசாதமாக
உபயோகிக்கவும் உகந்தது
உடன் அரைத்தெடுத்த சந்தனமாகும்.
அத்தகைய சுத்தமான
பச்சை சந்தனம்
யாழ்ப்பாணம் 73, மின்சாரநிலைய வீதியிலுள்ள
சுந்தரம் பிறதர்ஸ்
ஸ்தாபனத்தில்
எப்போதும் வாங்கக்கூடியதாக ஒழுங்குசெய்திருப்பது மிகவும் போற்றுதற்குரியதாகும்.

## விளம்பரம்

### யாவருக்கும் விசேஷித்த அழைப்பு

வாருங்கள்! வாருங்கள்! கேளுங்கள் தீர்க்கதரிசன தூதுமொழியை — இலவசம். இடத்திற்கு முந்துங்கள். புத்தகங்கள் இனும். அழகிய ஒளி விசித்திர படங்களுடன்விபரிக்கப்படும். சொற்பொழிவாளர் எவி. எவி. குருநாதர் தினசரி மாலை 6-15 மணிக்கு நவம்பர் 20 முதல் டிசம்பர் 4 வரை 'உலகம் எப்படி முடியும்?' 'ஒரு சாத்தனின் வேலை நிறுத்தம் 1000 வருஷம் சமாதானம்' 'மரணத்திற்குப் பின்னர் வேறு வடிவத்தில் வாழ்கிறேமா?' இப்படிப்பட்ட நூற்றுக்கணக்கான கேள்விகள்! சந்தேகம் நீங்கத் தக்கதாக பிரசங்கிக்கப்படும்.

456, ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம்.

புலோலி

### ஆண்கள் ஆங்கில பாடசாலை

பருத்தித்துறை

7-ம், 8-ம் வகுப்புகள், க. பொ. த. ஆரம்ப வகுப்பு (கலை, விஞ்ஞானம்) ஆகியவற்றில் சில இடங்கள் இருக்கின்றன. விண்ணப்பஞ் செய்ய விரும்புவோர் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தைப் பாடசாலை விளம்பரப் பலகையில் பார்த்து எழுதி, அதை நிரப்பி 15-12-65க்கு முன் அனுப்பவேண்டும். பரீட்சைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

மு. ஆ. தங்கராசா, அதிபர்.

15-11-1965 1258

### யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரி பிரிவு

பிரவேசம் 1966

1966லும் 1967லும் நடக்கும் சோதனைகளுக்குத் தயார்செய்யும்பொதுத்தராதரப்பத்திர உயர்நிலை பரீட்சை வகுப்புகளில் (கலைத்துறையும், விஞ்ஞானத்துறையும்) தை 1967ல் மாணவர் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

விண்ணப்பப் பத்திரமும் தகவல் தொகுப்பு அறிக்கையும் அலுவலகத்திலிருந்து 29-11-65க்கு முன் பெற்றுக்கொள்ள வேண்டும். விண்ணப்பிப்போர் தங்கள் விலாசமிட்ட, முத்திரை ஒட்டிய கடித உறை அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்.

வட்டுக்கோட்டை. 1260

### ஏலவிற்பனை

வண்ணார்பண்ணை வைரவ கோவில் வீதி நம்பர் 10ல் அடவு பிடிக்கும் சி. முத்துக்குமாரு அவர்களிடம் 1960-ம் ஆண்டு முதல் 1962-ம் ஆண்டு வரை அடவு வைத்த திருப்பப்படாத தங்கம், பொன், வெள்ளி நகைகளை 1965 கார்த்திகை 27-ந் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

C. இரகுநாதன், ஏலதாரர்.

1263




உதைபந்தாட்டம்

## சென். பற்றிக்ஸிடம் யாழ்ப்பாணக்கல்லூரி படுதோல்வி

யாழ்ப்பாணம், வியா.

யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற 1-ம், 2-ம் பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் 2-ம் பிரிவு வெற்றி தோல்வியின்றியும் 1-ம் பிரிவில் சென்பற்றிக்ஸ் கல்லூரி யாழ்ப்பாணக்கல்லூரியை ஒரு கோலும் போடாத வகையில் 7 கோல்களால் படுதோல்வியடையச் செய்தது. முதலில் நடைபெற்ற 2-ம் பிரிவுப் போட்டியின் முடிவு யாரும் எதிர்பார்க்காத முடிவாகக் காணப்பட்டது. ஒரு கோஷ்டியும் ஒரு கோலும் போடவில்லை. இப் பிரிவில் யாழ்ப்பாணக் கல்லூரிக்கோஷ்டிக்கு யேசுதாசனும், சென்பற்றிக்ஸ் கோஷ்டிக்கு விஜயகுமாரும் தலைமைதாங்கினர்.

1-ம் பிரிவுப் போட்டி பலத்த கரகோஷங்களுக்கிடையே விறுவிறுப்பாக ஆரம்பிக்கப்பட்டது. சென். பற்றிக்ஸ் கோஷ்டிக்கு சந்தியாக்கோவும் யாழ்ப்பாணக்கல்லூரிக் கோஷ்டிக்கு வலன்றைநினும் தலைவர்களாகப் போட்டியிட்டனர். இடைவேளைக்கு முன் 3 கோல்களை சென்பற்றிக்ஸ் தலைவர் சந்தியாக்கோ வெழுத்து வாங்கினர். இடைவேளைக்குப்பின் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்குக் கிடைத்த பனல்டியை கோல்காப்பாளரான கிறவுதர் அடித்து ஒரு கோல் பெற்றுக்கொடுத்தார். இதை அடுத்து வெற்றிவேலு, யேக்கப், மேவின் ஆகியோர் முறையே ஒவ்வொரு கோல்போட்டனர். யாழ்ப்பாணக்கல்லூரியில் மனோகரன், கிருபானந்தன் ஆகியோர் சிறப்பாக விளையாடியது குறிப்பிடத்தக்கது இப்போட்டியில் சென் பற்றிக்ஸ் 7—0 கோல்களால் யாழ்ப்பாணக் கல்லூரியைத் தோற்கடித்தது.

சென்பற்றிக்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிகளுக்கு திரு. டபிள்யு. ஜே. பி. ஞானரட்னம், திரு. குமரையா ஆகியோர். மத்தியஸ்தம் வகித்தார்கள்.

### ரேயல் கோஷ்டி வென்றது

கோண்டாவில், வியா.

கோண்டாவில் ரேயல் உதைபந்தாட்டக்கோஷ்டிக்கும், கலைவாணி உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில்ரேயல்கோஷ்டி 3—2 கோல்களால் கலைவாணிக் கோஷ்டியைத் தோற்கடித்தது. இதற்கு திரு. செல்வரத்தினம் மத்தியஸ்தம் வகித்தார்.

### காமன்வெல்த் விளையாட்டுப்போட்டி

கிங்ஸ்டன், நவ. 18

அடுத்த ஆகஸ்ட் மாதம் இங்கு நடைபெறவிருக்கும்பிரிட்டிஷ் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் 36 நாடுகள் கலந்துகொள்கின்றன. மேலும் 4 நாடுகள் இதில் சேருமென எதிர்பார்க்கப்படுவதாய் ஒழுங்குசெய்யும் கமிட்டித் தலைவர் திரு ஹெர்பர்ட் மக்டொனுல்ட் கூறினர். பி. டி. ஸி.





### கொழும்பு

வெள்ளி 19-11-65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30தோத்திரப்பாடல்கள், 8-00 தேர்ந்தஇசை.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

44 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாதஸ்வரம், 5-45 சிறுகதை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 முத்திநெறி, 7-15 பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 நேயர்விருப்பம்,10-00 கிளாரினெட், 10-15 இசையமுதம்.


### பள்ளிவாசல் திறப்புவிழா

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் முஹ்யித்தீன் மஸ்ஜித் வீதியில் புனர் நிர்மாணம் செய்யப்பட்டுள்ள முஹ்யித்தீன் பள்ளி வாசல் திறப்புவிழா ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். அல்ஹாஜ் மௌலவி ஏ. ஏ. எம். மஸ்ஊத்மௌலவிஎன். டி. அப்துல் தஸ்ஸாக் (ஜமாலி), அப்சலுல்உலமா பி. கே. எம். அப்துல்காதிறு இஸ்லாமிய நிலைய பொதுச் செயலாளர் ஜனுப் எம். பி. எம். மாஹிர் ஆகியோர் கொழும்பிலிருந்து வந்து இவ்விழாவில் கலந்துகொள்வர்.

### சேர். பொன். இராமநாதன் நினைவு தினம்

யாழ்ப்பாணம், வெள்ளி

காலஞ்சென்ற சேர். பொன்னம்பலம் இராமநாதன் நினைவு தினம், சுன்னுகம் இராமநாதன் கல்லூரியில் இம்மாதம் 29-ம் திகதி திங்கட்கிழமை கொண்டாடப்படும்.

அன்று மாலை கல்லூரியில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில், நீதியரசர் டாக்டர் ஏச். டபிள்யூ. தம்பையா கியூ. ஸி. மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

## மாதோட்ட நகர் பற்றிய சித்திரம் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகும்

பம்பலப்பிட்டி, வியா.

சரித்திரப் பிரசித்திவாய்ந்த மாதோட்ட நகர் பற்றிய சித்திரம் ஒன்றை இலங்கை வானொலியில் தமிழ் ஒலிபரப்பில் இம்மாதம் 20-ந் திகதி இரவு 6-15 மணி முதல் 10-30 மணி வரை கேட்கலாம்,

புதை பொருள் ஆராய்ச்சி அறிக்கைகளை அடிப்படையாகக்கொண்டு, பத்துவருட ஆராய்ச்சியின் பின்னர் இந்தச்சித்திரத்தை வானொலிக்கு என தான் இறப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னரே முன்னுள் தொழில் உதவிக் கமிஷனர் திரு. ந. மகாதேவா எழுதிமுடித்திருந்தார்.

இந்தச் சித்திரம் தனது தன்மையில் முதன்மை வாய்ந்தது எனக் கருதப்படுகிறது இதில் 20 கலைஞர்கள் பங்குபற்றுகிறார்கள். திரு. சி. வி. ராஜசுந்தரம் திருவாளர்கள் எஸ். நடராஜா, அல்பேட் டயஸ் ஆகியோரின் உதவியுடன் தயாரித்தளிக்கிறர்.


## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

லொறிகள், ட்ருக்ரர்கள், ட்றேயிலர்களுக்குரிய 700-20, 750-20, 825-20 அளவுள்ள திறமான புதுப்பித்த டயர்கள் விற்பனைக்கு உண்டு. சிற்றி ரயர் ஸ்ரோர்ஸ், 6, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.

1383

### வாடகைக்கு

காரைநகர் துறைமுகம் வியாபாரஸ்தலம் வாடகைக்கு. விண்ணப்பிக்கவும். பொன்னம்பலம், துறைமுகம். 1381

### தேவை

பிள்ளைகளின் சட்டைகள், பிளவுஸ், பிறேசியர் முதலியவை வெட்டவும் தைக்கவும், மெஷினில் பூவேலைகள் போடவும் பூரண அனுபவமுள்ள பெண்கள் தேவை. 28-11-65க்கு முன் நேரில் மனுச்செய்க. அரசரத்தினம், 34, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம் 1385


## குளத்தடி வாய்க்காலை திருத்த ரூ. 15,000 நன்கொடை தருக

### மத்திய அரசாங்கத்திற்கு பட்டினசபைத் தலைவர் கோரிக்கை

மாவிட்டபுரம், வியா.

காங்கேசன்துறை பட்டின சபை முதலாவது வட்டாரத்திலுள்ள குளத்தடி வாய்க்காலை ஆழமாக்கி சிமெந்தினல் கட்டுவதற்கு பதினையாயிரம் ரூபா நன்கொடைப்பணமாக உதவுமாறு காங்கேசன்துறைப் பட்டினசபைத் தலைவர்திரு. எஸ். கிருபாமூர்த்தி மத்திய அரசாங்கத்தைக் கோரியுள்ளார்.

இந்த வாய்க்காலை சிமெந்தினல் கட்டுவதன் மூலம் மயிலப்பை, வீமன்காமம் தெல்லிப்பளை போன்ற இடங்களிலுள்ள தாழ்வான பகுதிகளில் ஏற்படும் பெருவெள்ளங்களைத் தடுக்கமுடியுமென்று அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பொழுது சிறிய மழை வந்தால் கூட இவ்விடங்களில் பரவலாக வெள்ளம் ஏற்பட்டுவருகிறது. ஆனல் வாய்க்காலை சிமெந்தினல் கட்டினல் வெள்ளம் நிற்காமல் கடலுக்குப்போய் விடும். அண்மையில் ஏற்பட்ட சிறிய வெள்ளத்தினல்கூட பல வீடுகள் சேதமடைந்து மக்கள் வீடுகளை விட்டு வெளியேறினர் என்று மத்திய அரசாங்கத்திற்கு பட்டின சபைத் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### மின்சார . . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர் பொன். இராமநாதன் வீதி

திரு. சி. நாகராசாவினல் கொண்டுவரப்பட்ட கீழ்க்காணும் பிரேரணை மராமத்துக் கமிட்டிக்கு விடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட காங்கேசன்துறை வீதி என அழைக்கப்படும் வீதியை காலஞ்சென்ற மேதை சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் ஞாபகார்த்தமாக 'சேர் பொன். இராமநாதன் வீதி' என அழைக்கப்பட வேண்டுமென்றும் இதேவண்ணம் தத்தம் எல்லைக்குள் இவ் வீதியின் பெயரை மாற்றி அமைக்கும்படி சம்பந்தப்பட்ட மற்றைய உள்ளுராட்சி மன்றங்களையும் கேட்டுக் கொள்வதென்றும் யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட மானிப்பாய்வீதி என்று அழைக்கப்படும் வீதியை காலஞ்சென்ற மேதை சேர்பொன்னம்பலம் அருணசலம்அவர்களின் ஞாபகார்த்தமாக 'சேர் பொன். அருணசலம் வீதி' என அழைக்கப்பட வேண்டுமென்றும் இதே வண்ணம் தத்தம் எல்லைகளுக்குள் இவ் வீதியின் பெயரை மாற்றி அமைக்கும்படி 'சம்பந்தப்பட்ட ஏனைய உள்ளுராட்சி மன்றங்களையும் கேட்டுக்கொள்வதென்றும் இச்சபை தீர்மானிக்கிறது.

யாழ்ப்பாண நூல் நிலையத்திற்கு ஓர் உதவி வாசிகசாலை மேற்பார்வையாளரை நியமனம் செய்வதுபற்றி ஆலோசிக்கப்பட்டு, புதிதாக விளம்பரம் செய்து, விண்ணப்பங்கள் கோருவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

காலியாகவிருக்கும் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் பதவிக்கு, தமிழ் தெரிந்தவரும், தமிழில் நிர்வாகம் நடத்தக்கூடியவருமான ஒருவரை நியமிக்கவேண்டும் என்று கோருவதென திரு, தம்பு கந்தையா கொண்டு வந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

தென்னிலங்கையிலுள்ள பாடசாலைகளில் தமிழ்வகுப்புகளை மூடாது, தொடர்ந்து நடாத்த வழி செய்யும்படி தேசிய அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதென திரு. என். ரி செல்லத்துரை கொண்டுவந்த தீர்மானமும் ஏகமனதாக நிறைவேறியது.

### கிருஷ்ணன் முதலிடம்

புதுடில்லி, நவ. 18

ஆர். கிருஷ்ணன் 1965/66-ம் ஆண்டுக்கு முதல்தர சாம்பியனுக அறிவிக்கப்பட்டிருக்கிறர். டேவிட் முகர்ஜி இரண்டாவதாகவும், பிரேம்ஜித்லால் மூன்ருவதாகவும் வருகின்றனர்.

# பிரதமர் டட்லி-செல்வா உடன்படிக்கை

## 'ஜனதின' தினசரி விபரம் வெளியிட்டது

யாழ்ப்பாணம், வியாழன்

ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயகாவுக்கும், தமிழரசுக்கட்சித்தலைவர் திரு. எஸ. ஜே. வி. செல்வநாயகத்துக்குமிடையில் தேசீய அரசாங்கம் அமைக்கப்படுமுன்னர் இவ்வருடம் மார்ச் மாதம் 24-ந் திகதி இரவு கைச்சாத்தாகிய உடன்படிக்கையின் முழு விபரத்தையும் தாங்கள் கண்டுபிடித்துள்ளதாகக் கூறி, 'ஜனதின' தினசரிப் பத்திரிகை தனது நேற்றைய 17-11-65 வெளியீட்டில் முதல் பக்கத் தலைப்புச் செய்தியாக வெளியிட்டிருந்தது.

உடன்படிக்கையின் விபரம் அந்தப் பத்திரிகை சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் வெளியிட்டவை வருமாறு:—

உடன்படிக்கை கீழ்க்காணும் விஷயங்களுக்கு வகைசெய்கிறது:

(1) நிர்வாக மொழி

(ஏ) வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழில் நிர்வகிக்கப்படும்.

(பி) நாட்டின் எந்தப் பகுதியிலும் வசிக்கும் தமிழர், அரசாங்கத்துடன் தமிழில் தொடர்புகொள்ள உரிமையுடையவர் என்பதை ஐக்கிய தேசியக்கட்சி ஒப்புக்கொள்கிறதென்பதை திரு. டட்லி சேனநாயக்கா கொள்கையளவில் ஏற்றுக் கொள்கிறார்.

(2) நீதிமன்ற சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்து பின்வருவனவற்றுக்குவகை செய்தல்:

(ஏ) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள நீதிமன்றங்களில் தமிழில் நிர்வாகம் நடத்துதல் (அத்துடன்)

(பி) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள நீதிமன்றங்களின் நடவடிக்கைகளைத் தமிழில் பதிவுசெய்துவைத்தல்.

[3] மாவட்ட சபைகளை நிறுவுவதற்கு மிக விரைவில் சட்டம் இயற்றுதல்:

[4] காணிக் குடியேற்றத்திட்ட சட்டத்தில் பின்வருவற்றுக்கு வகைசெய்யக்கூடியதாகத் திருத்தம் கொண்டுவருதல்:

(ஏ) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள அரசாங்க நிலங்களைப் பங்கிடும்போது அப்பகுதிகளைச் சேர்ந்த காணியற்ற விவசாயிகளுக்கு முதல் சலுகை வழங்குதல்.

(பி) அடுத்தபடியான சலுகை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வசிப்பவர்களுக்கே வழங்குதல்.

(ஸி) இதன்பின்னரே வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள நிலங்கள் நாட்டின் மற்றும் பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுக்கப்படலாம்.

ஒப்பம் டட்லி சேனநாயக்கா,
எஸ். ஜே. வி. செல்வநாயகம்.

## வவனியா அரசாங்க அதிபர் களை பிடுங்கினர்

வவனியா, வியாழன்

''பாடசாலை மாணவர்கள் களை பிடுங்கும் இயக்கத்தில் கலந்து கொள்வது அவர்களின் வருங்கால நலனுக்கு ஓர் சிறந்த வழி அமைப்பதாகவிருக்கும். மாணவர்களுடன் அரசாங்க உத்தியோகத்தர்களையும் இந்த இயக்கத்தில் பங்கு கொள்ளச் செய்ய ஊக்குவிக்கும்தேசிய அரசாங்கத்தின் நன்முயற்சி மிகவும் பாராட்டுக்குரியது.'

இவ்வாறு பட்டாணிச்சி புளியங்குளம் வயலில் களை பிடுங்கும் வைபவத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்துப்பேசிய வவனியா அரசாங்க அதிபர் திரு. பி. பி. திலநாயகா கூறினார்.

வவனியா தமிழ் மகாவித்தியாலய மாணவர்களும், விவசாய ஆசிரியர் திரு சுந்தரலிங்கமும் கமத்தொழிற் சேவை வெளிவேலை உத்தியோகஸ்தர் திரு. வெ முத்துலிங்கம் தலைமையில் உணவு உற்பத்தியைப் பெருக்கி நாட்டின் சியதேவையைப் பூர்த்தி செய்வோம் என்ற கோஷத்துடன் ஊர்வலமாகச் சென்று பட்டாணிச்சி புளியங்குளம் அரசினர்பாடசாலை மாணவர்களையும் சேர்த்துக் கொண்டு களை பிடுங்கும் இயக்கத்தினர் ஈடுபட்டார்கள்.

வவனியா அரசாங்க அதிபர், கமத்தொழில் சேவை உதவி ஆணையாளர் திரு. ந. புலேந்திரன், மாவட்ட கிருஷிகஅதிபர் திரு. எஸ். நடேசன், மாவட்ட கல்வி அதிகாரி திரு. எஸ். ஞானசேகரம், காரியாதிகாரி திரு. என். பூரணலிங்கம் ஆகியோர் உட்பட பல அரசாங்க உத்தியோகத்தர்களும் இதில் கலந்து கொண்டனர்.

அரசாங்க அதிபர் திரு. பி. பி. திலநாயக்காவும் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களும் மாணவர்களுடன் சேர்ந்து வயலில் இறங்கி களைபிடுங்குவதில் ஈடுபட்டார்கள். பயிர்ச் செய்கைக் குழுவும், கமத்தொழில் சேவை இலாகாவும் இதற்கான ஏற்பாடுகளைச் செய்தன.

## நள்ளிரவில் சென்றவரை இளம் பெண் வெட்டினராம்!

யாழ்ப்பாணம், வெள்ளி

நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு. தகாத முறையில் நடக்க முயற்சித்த ஒருவரை இளம் பெண் கத்தியினால் வெட்டிய சம்பவமொன்று காரைநகர் வடக்கைச் சேர்ந்த மல்லிகை என்னும் குறிச்சியில் நடந்துள்ளது.

கணபதி சின்னையன் என்பவர், நள்ளிரவில் ஆறுமுகம் மகள் சிவகாமியுடன் தகாத முறையில் நடக்க முயற்சித்ததாகவும், இதைத் தொடர்ந்து அப்பெண் அவரைத் தாக்கக்கூடாத இடத்தில் கத்தியால் வெட்டியதாகவும். இச்சம்பவம் பற்றிக் கூற படுகிறது.

உயிருடன் போராடிக் கொண்டிருந்த காயமடைந்தவரை காரைநகர் வடக்கு கிராமசேவகர் உடனடியாக முயற்சியெடுத்து யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதித்துள்ளார்.

காயமடைந்தவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரியவருகிறது.

இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்களைப் பொலிஸார் கைது செய்து தொடர்ந்து புலன் விசாரணை செய்து வருகிறார்களென அறியப்படுகிறது.

## உரியவர் யார்?

யாழ்ப்பாணம், வெள்ளி

சுன்னாகம் தெற்கைச் சேர்ந்த திரு. ம. செந்திநாதன் என்பவரால் ஒரு பங்கிட்டரிசிப் புத்தகம் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த அத்தாட்சியுடன் ஈழநாடு காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## ரஸ்க் முகத்தில் உமிழ்ந்தான்

மொண்டிவிடியோ, நவ. 18

நேற்று நடைபெற்ற தேசியவீரர் ஜோஸ் ஆர்ட்டிகாஸின் சமாதிக்கு மலர் வளையம் வைக்கும் வைபவத்தின் போது, அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. டீன் ரஸ்கின் முகத்தில் ஒரு இளம் மாணவன் காறி உமிழ்ந்தான். பொலிசார் 'குப்' என அவனைக் கைதுசெய்தனர். திரு. ரஸ்க் பின்பு அமெரிக்க நாடுகள் மகாநாட்டுக்காக விமானத்தில் ஏறினர்.

பி. டி. ஸி.

## பிரிட்டிஷ் தளத்துக்கு டில்லி எதிர்ப்பு

புதுடில்லி, நவ. 18

இந்து மகா சமுத்திரத்தில் பிரிட்டன் ராணுவத்தளம் அமைப்பதை இந்தியா எதிர்க்கும் என வெளிநாட்டு உதவி மந்திரி திரு. தினேஷ் சிங் ராஜ்ய சபையில் கூறினர்.

உத்தேச ஆங்கிலேயஅமெரிக்க தளம்பற்றிய கேள்விக்கு அவர் பதிலளித்தார்.

மொரிஷியஸ்தீவுக்கு சுதந்திரம் அளிக்குமுன் தளம் அமைப்பதற்காக சில தீவுகளை ஒப்படைக்க பிரிட்டன் நிபந்தனை விதித்தது என்றும் திரு. சிங் கூறினர்.

## "ஒற்றுமை வேண்டும்"

மட்டக்களப்பு, புதன்

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு'' என்று பைந்தமிழ் பாவலன் பாரதி அன்று கூறினன். பாரதியின் கூற்றுக்கு இணங்க இந்த நாட்டிலுள்ள மக்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்தால நாம் முன்னேறுவோம் நாடு முன்னேறும்'' என்று பட்டிருப்புத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் களுவாஞ்சிக்குடி மின்சார விநியோகத்தை திறந்துவைத்துப் பேசுகையில் கூறினர்.

களுவாஞ்சிக்குடி கிராம சபை தலைவரும் முன்னாள் உதவி அமைச்சருமான திரு. எஸ். யூ. எதிர்மன்னசிங்கம் தலைமையில் நடைபெற்ற மின்சார விநியோகத் திறப்பு விழாவில் கலந்து மின்சார விநியோகத்தை திறந்து வைத்துப் மேலும் பேசுகையில் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் கூறியதாவது: மின்சாரம் ஒளி கொடுப்பது போல் கிராமத்துக்கும் ஒளியைக் கொடுக்க இந்தப் பட்டிருப்புத் தொகுதியில் வாழும் ஒவ்வொரு மக்களும் முன்வர வேண்டும்.

## ரூ. 175 லட்சம் தங்கம் சேர்ந்தது

புதுடில்லி, நவ. 18

இதுவரை பாதுகாப்பு நிதிக்கான தங்கப்பத்திரத்தில் 1300 கிலோ கிராம் தங்கம் சேர்க்கப்பட்டிருப்பதாய் அறிவிக்கப்பட்டது. இதன் மதிப்பு ரூ. 175 லட்சம்.

## புறக்டர் மறைவு

### மாநகரசபையிலும் நீதிமன்றத்திலும் அனுதாபம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மாநகர சபையில் 9 வருட காலமாக கடமையாற்றியவரும், முன்னாள் அங்கத்தவருமான புறக்டர் திரு. அல்பிரட் சுவாம்பிள்ளையின் மரணம் குறித்து நேற்று மாலை நடைபெற்ற மாநகரசபைக் கூட்டத்தில் அனுதாபத்தீர்மானம் ஒன்று நிறைவேறியது.

மேயர் திரு. எஸ். சி. மகாதேவா தலைமையில் கூட்டம் ஆரம்பமானபோது 1-ம்வட்டார உறுப்பினர் திரு. ஏ. ஜி. ராஜசூரியர், அனுதாபத் தீர்மானத்திற்கான பிரேரணையைக் கொண்டு வந்து பேசும்போது, அவரது சேவையைப் பாராட்டினர். திரு. சுவாம்பிள்ளை ஒழுங்கு கட்டுப்பாட்டுடன் பணியாற்றி, எல்லா மக்களுடனும் அன்பாக நடந்து நேர்மையாகத் தொண்டாற்றினர் என்றும் அவர் கூறினர்.

திரு. எம். எம். சுல்தான் பிரேரணையை ஆமோதித்தார். மேயர் திரு. எஸ். சி. மகாதேவா, திருவாளர்கள். எஸ். நாகராசா, எஸ். பேரின்பநாயகம் ஆகியோரும் பேசினர்கள்.

### நீதிமன்றத்தில்

யாழ்ப்பாண மாவட்டநீதிமன்றம், நேற்றுக்காலை நீதிபதி திரு. என். எம். ஜே. ராஜேந்திரம் முன்னிலையில் கூடியபொழுது, காலஞ்சென்ற புறக்டர் அல்பிறட் சுவாம்பிள்ளை ன் மரணம் குறித்து அனுதாபத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டு, அவரது குடும்பத்தாருக்கு அனுப்பி வைப்பதென தீர்மானிக்கப்பட்டது.

மாவட்ட நீதிபதியுடன், யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே. இராஜரத்தினம் அடிஷனல் மாவட்ட நீதிபதி திரு. நைல்ஸ் ஆகியோரும் வழக்கறிஞர்களும்இருந்தனர். நீதிமன்ற மண்டபத்தினுள் வழக்கறிஞர்களும் பொதுமக்களும் திரண்டிருந்தனர்.

மாவட்ட நீதிபதி பேசும்போது காலஞ்சென்றசுவாம்பிள்ளை மக்களின் மதிப்பைப் பெற்றவர் எனக் கூறினர்.


விற்பனைக்கு

ஒரு வருடம் வரையில் ஒரு கைப்படப் பாவித்த நல்ல நிலையிலுள்ள, சுப்பர் டெக்ஸ்ரா ராக்ரர், (Fordson Super Dexta Tractor) விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு நேரில் வரவும்.

ராஜா கோப்பரேஷன்

ராக்ரர் பகுதி,

பரந்தன் 1255


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ப வன்கோவில் மேலைவீதியிலுள்ள இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 19ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.